1982 பிப்ரவரி 2]

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர்ப்புற கழிவு நீரைக் கொண்டு, மதுரை மாநகரிலே அவினியாபுரம் என்னும் இடத்திலே கால்நடைகளுக்கான தீவனம் மிகப் பெரிய அளவிலே உற்பத்தி செய்யப்படுகிறது. அது போலவே இதர நகர்ப்புறங்களிலேயும், கழிவு நீரைப் பயன் படுத்தி கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, சென்னை மாநகர், மதுரை மாநகர் கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் ஏனைய 17 நகராட்சிகளிலேயும், இப்படி நகர்ப்புற கழிவு நீரை பயன்படுத்தி புல் போன்ற கால்நடைத் தீவனங்களை, விளைவிக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதை அதிகரிப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10.50.)

திரு ஏ. டி. குலசேகர்: : கோவை நகரத்தில் வெள்ளலூர் பகுதியில் கழிவு நீருக்காக இதுவரை எவ்வளவு ஏக்கர்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

1979-80-ல் அரசு பண்ணைகளில் சாகுபடி செய்யப்பட்ட உணவுப் பயிர்களின் அளவு.

* வினா எண் 8—திரு என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு பண்ணைகளில் 1979–80 ஆம் ஆண்டில் உணவுப் பயிர்கள் எத்தனை ஏக்கர்களில் சாகுபடி செய்யப் பட்டது?

(ஆ) அதன் உற்பத்தித் திறன் என்ன ?

(இ) அதனால் அரசுக்கு லாபமா ? நட்டமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) 4,366 ஏக்கர்கள்.

(ஆ)

பயிர்கள்.	சராசரி ஏக்கர் விளைச்சல். கிலோ.
நெல்	1,018
சிறுதானியம்	391
வீரிய ஒட்டு சிறுதானியம் ..	470
பயறு வகைகள் ..	61
காய்கறிப் பயிர்கள்	236

(இ) நட்டம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1982 பிப்ரவரி 2

திரு. என். பழனிவேல் : அமைச்சர் அவர்கள் 4,366 ஏக்கருக்கு சராசரி 1,018 ஏக்கர் உற்பத்தியானதாகச் சொன்னார்கள். இது சாதாரணமாக விவசாயிகள் உற்பத்தி செய்வதை விட அதிகமா அல்லது கம்மியா? நஷ்டம் என்று சொன்னார்கள் பொதுவாக. அது ஆண்டு வாரியாக எவ்வளவு நஷ்டம் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பண்ணைகளைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்பது நோக்கமாக இருக்கிற காரணத்தால் மற்ற விவசாயிகள் செய்வதைவிட இது சற்று அதிக உற்பத்திச் செலவை பெற வேண்டியிருக்கிறது. ஆகவே இழப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இதிலுள்ள நிலங்கள் பெரும்பாலும் புறம்போக்கு நிலங்கள், தரிசு நிலங்கள், நீர்ப் பாசன வசதி கிடைக்க முடியாத நிலங்களாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் இப்போதுதான் சீர்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒட்டு மொத்தமாகப் பார்க்கப் போனால் இதில் விதைக் கிடங்குகள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் இவற்றிற்கான முதலீட்டுத் தொகைக்கு வட்டியும், விதைக் கிடங்குகள் மற்றும் கருவிகளின் தேய்மான தொகையும் செலவினமாக எடுத்துக் கொள்ளப்படுவதால் இந்த இழப்பு ஏற்படுகிறது. அலுவலர்களுக்கான செலவு என்பதை மட்டும் பார்க்கிறபோது 1979-80-ல் ரூ. 3.47 இலட்சம் இலாபத்தில் இயங்கியுள்ளன. வருகிற ஆண்டு கூட ஐந்து லட்சம் ரூபாய் இலாபம் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : கட்டடங்கள் போன்ற செலவுகளை நீக்கி இலாபம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அந்தத் தொழில் இலாபகரமாக இயங்குகிறது என்று நான் கருதுகிறேன். இந்தச் சூழ்நிலையில் நேற்றைய பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் தஞ்சை மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் போன்ற மாவட்டங்களில் உள்ள பண்ணைகளில் பணி புரியக்கூடிய தொழிலாளர்களை வேலையை விட்டு நிறுத்தியிருப்பதாகவும் இதன் காரணமாக அந்தக் குடும்பங்கள் நடுத் தெருவில் நிற்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இந்நிலை ஏன் ஏற்பட்டது? இந்நிலையை நீக்கி சட்டபடி அவர்களுக்குண்டான உரிமைகள் அவர்களுக்கு கிடைப்பதற்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதைத் தனியாக ஆராய வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் அதைப் பற்றி அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

[1982 பிப்ரவரி 2]

திரு. நா. சுந்தர்ராஜ்: பல ஆண்டுகளுக்கு முன்பு அரசுப் பண்ணை ஒன்று என் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக பல இலட்சக்கணக்கான ரூபாயில் கட்டடங்கள் கட்டப்பட்டு இன்று அப்பண்ணை செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஆராயப்படும்.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்.

*வினா எண் 9 திரு. து. புருஷோத்தமன், திரு. செ. செம்மலை, திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணெய் வித்துக்கள் 1978–79, 1979–1980 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி அளவு எவ்வளவு?

(ஆ) உற்பத்தியை பெருக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பெற்றுள்ளது.

திரு து. புருஷோத்தமன்: கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் இவைகள் எல்லாம் ஏழைகள் வாங்கமுடியாத அளவிற்கு அவற்றின் விலைகள் ஏறியிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? ஆகவே, அவற்றின் உற்பத்தியை தீவிரப்படுத்த புதுத் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா? அதே போல் மத்திய அரசு தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்கிறது. தேங்காய் எண்ணெய் விலை ஏறாமல் இருக்க மத்திய அரசிடமிருந்து தேவையான அளவு, அதிகப்படியான அளவில் தேங்காய் எண்ணெய் பெறுவதற்கு திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு, கா. காளிமுத்து: எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகமாக்க வேண்டும் என்பதற்காகத்தான் எண்ணெய் வித்துத் துறை என்பது நிறுவப்பட்டு 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாளிலிருந்து அது இயங்கிக் கொண்டிருக்கிறது. வித்துக்கள் அதிகமாக உற்பத்தியாவதற்குரிய வகையில்,

* 129 மற்றும் 130 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.